<u>**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**</u>

**O.S. No.36/2003**

Deposition of **P.W.-4** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 16.04.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவிசங்கர் | Father's Name | : பழனிவேல் |
| Village | : ஆத்தூர் | Taluk | : ஆத்தூர் |
| Calling | :துணை பதிவாளர் கூட்டுறவு சங்கம், ஆத்தூர் | Age | : 49 |

துவக்க நேரம் : 11.39 A.M.

**<u>வாதிகள் தரப்பில் முதல் விசாரணை</u>** : நான் தற்பொழுது ஆத்தூர் சரக கூட்டுறவு சங்கங்களில் துணை பதிவாளராக பணியாற்றி வருகிறேன். இன்றைய தினம் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு ராமநாயக்கன்பாளையம் நில குடியேற்ற கூட்டுறவு சங்கம் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்து சாட்சியம் அளிக்க வேண்டி அழைப்பாணை அளிக்கப்பட்டது.

2. கடந்த 1959-ஆம் ஆண்டு ராமநாயக்கன்பாளையம் நில குடியேற்ற கூட்டுறவு சங்கம் துவங்கப்பட்டு கடந்த 1988-ல் கலைக்கப்பட்டு 1995-ல் அது தொடர்பான இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையின் நகலை தற்பொழுது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். (மேற்படி ஆணை அசலுடன் சரிபார்க்கப்பட்டது). அந்த ஆணை Ex.X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. மேற்படி சங்கம் தொடர்பான மற்ற ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை. பொதுவாக இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்ட 3 வருடங்களுக்கு பிறகு சங்கம் தொடர்பான ஆவணங்கள், உறுப்பினர்களின் பதிவேடுகள், நிலம்

தொடர்பான வருவாய் துறை ஆவணங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துவிடுவது வழக்கம். அவ்வாறு ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதற்கான பதிவேடுகளும் எங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை. அது தொடர்பாக நான் சமர்ப்பித்துள்ள அறிக்கை Ex.X2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அது தொடர்பான ஆவணங்கள் கிடைக்கப்பெறுமா என்றால் அவ்வாறு கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லை.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 11. 59 A.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-D.Jansi Rani
Additional District Munsif(F.A.C), Attur

Typed by Tmt.L.Kalaiselvi - O.S. No.36/2003 , Dt.16.04.2025.